1972 டிசம்பர் 14] [Thiru B. Venkataswamy]

development. Cigarette factory can be started there and the Hon. Minister for Co-operation has stated this morning that tobacco can be produced there. So I request the Government to take immediate steps to open a cigarette factory there. Also I request the Government to conduct a detailed survey of the district so that we can know which industries can be started by the State and the Central Governments.

As regards sericulture, there is great scope for development there. In this connection, I want to point that permanent pattas should be given to the growers of mulberry or atleast pattas should be given after a period of five years. Two days ago I read an article wherein it is stated that there is much scope for export of silk and so we can earn foreign exchange by producing silk. With these words, I conclude my speech.

(8) அமைச்சரவைமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பட்டியலையும் அதற்கான பதில் பட்டியலையும் பேரவை முன் வைத்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு நான் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் இப்போது ஜனாதிபதியிடத்தில் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களும் மற்றவர்களும் அளித்த பட்டியலையும், அதற்கு அரசாங்கச் சார்பில் அளிக்கப்பட்ட, பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள பதில் பட்டியலையும்@ இந்தப் பேரவையின் முன்னால் இப்போது வைக்கிறேன். (ஆரவாரம்.)

(7) 1972-73-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. பொ. பத்மநாபன் : தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு துணை மதிப்பீட்டுக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தில் தாமிரவருணி நதி நீர்ப்பாசனத்தில் முறையே மேலிருந்து கீழ் வரிசைக்கிரமமாகக் குளங்களுக்குத் தண்ணீர் விடாமல் திருவைகுண்டம், திருச்செந்தூர் பகுதிகளில் பழந்தொழி என்ற முறையில் கடந்த கார் பருவத்தில் தண்ணீரை விரைக்கி மேல்பகுதியில் உள்ள

@14—12—1972-ம் தேதி பேரவை முன் வைக்கப்பட்டது.